# வியாபாரக் காப்புறுதி - காப்புறுதித் திட்டம் தொடர்பான தகவல் ஆவணம்

**காப்புறுதி வகை:** வியாபாரக் காப்புறுதி

**வழங்கப்படுகின்ற அடிப்படைக் காப்பீடு:**

1 **ஆம் பிரிவு** – காப்புறுதிக் காலவரையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் காரணமாக கட்டிடத்தில் இருக்கின்ற சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

- தீ மற்றும் மின்னல்
- வெடித்தல்
- பௌதிக சேதப் பிரிவுக்காக கலகம் மற்றும் பணிப்புறக்கணிப்பு காப்பீடு
- துவேசகரமான சேதங்கள்
- மோதல் சேதம்
- வானூர்தி சேதம்
- நீர்த்தாங்கி, உபகரணங்கள், குழாய்கள் வெடித்தல் மற்றும் நிரம்பி வழிதல்
- சூறாவளி, புயல், சண்டமாருதம், ஹரிகேன், டைபூன், டோனாடோ
- வெள்ளப்பெருக்கு
- பூமியதிர்வு, எரிமலை வெடித்தல் மற்றும் சுனாமி
- திருட்டுக் காப்பீடு

*(அடிப்படைக் காப்பீடு பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 02, 03 மற்றும் 04 ம் பக்கங்களைப் பார்க்க)*

**மேலதிக காப்பீடுகள் (மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்):**

2 ஆம் பிரிவு – தெரிவுக்குரிய காப்பீடுகள் - காப்புறுதித் திட்ட அட்டணையில் குறிப்பிடப்பட்டிருந்தால் மாத்திரம் இந்தப் பிரிவு ஏற்புடையதாகும்.

- பயங்கரவாதக் காப்பீடு - *தயவுசெய்து புறக்குறிப்பு பிரிவின் ''பயங்கரவாத புறக்குறிப்பு – TR 02, 13, 14, 15 மற்றும் 17'' ஐப் பார்க்க*
- மின் உபகரணங்கள் மற்றும் பொருத்துகைகள் ஆகியவற்றுக்கு தீ மற்றும் மின்னலால் ஏற்படும் சேதம்.
- வியாபாரம் தடைப்படல்

  1 ஆம் பிரிவின் கீழ் ஓர் உரிமைக்கோரலை விடுக்க காரணமாயமைகின்ற மற்றும் காப்புறுதிக் காலவரையில் உங்களின் வழமையான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இருந்து உங்களைத் தடுக்கின்ற எந்தவொரு நிகழ்வும்
- பணம்

  காப்புறுதி செய்யப்பட்டவரின் ஒரு சொத்தாக இருக்கின்ற அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் வியாபாரத்துடன் தொடர்புடைய காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக் கூற வேண்டியுள்ள பணத்திற்கு காப்புறுதி செய்யப்பட்டவரால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள நிலைமைகள் மற்றும் சந்தர்ப்பங்களில் ஏதேனும் ஒரு காரணத்தால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

- பொதுமக்கள் பொறுப்பு

  கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பில் மூன்றாம் தரப்பிற்கு நட்டஈடாக செலுத்துவதற்கு காப்புறுதி செய்யப்பட்டவர் சட்டப்படி பொறுப்பாகவுள்ள பணத் தொகைகள் (சட்ட நடவடிக்கைகளுக்கான செலவு உட்பட):

  - ஒரு நபருக்கு ஏற்படுகின்ற விபத்து மரணம் அல்லது உடற்காயங்கள் அல்லது நோய்
  - காப்புறுதி செய்யப்பட்டவரின் கட்டிடத்தில் வியாபாரத்தை நடாத்துகின்ற போது அல்லது அது தொடர்பாக ஸ்பரிசிக்க்கூடிய பொருட்களுக்கு எதிர்பாரத விதமாக ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

- பொருத்தப்பட்ட கண்ணாடிகள் மற்றும் அறிவித்தல் பலகைகள் / பெயர்ப் பலகைகள்

  பொருத்தப்பட்ட கண்ணாடிகள் எதிர்பாராத விதமாக உடைதல் அல்லது சேதமடைதலுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டவர் நட்டஈடு செலுத்துதல்

- குறிப்பிட்ட நபர்களுக்கு ஏற்பகின்ற தனிநபர் விபத்து

  விபத்து காரணமாக ஏற்படும் மரணம்
  விபத்து காரணமாக ஏற்படும் பூரண நிரந்தர இயலாமை
  விபத்து காரணமாக ஏற்படும் பகுதியளவிலான நிரந்தர இயலாமை
  இறுதிக் கிரியை செலவுகள்

- தொழிலாளர் நட்டஈடு

  தொழிலாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் அல்லது பொதுச் சட்டத்தின் பொறுப்புக்களுக்கு இணங்க, காப்புறுதி செய்யப்பட்டவரின் ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது ஒரு விபத்து அல்லது நோய் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் தனிநபர் காயங்கள் காரணமாக காப்புறுதி செய்யப்பட்டவரின் சட்டரீதியான பொறுப்புக்கள்.

- அதிகுளிர்சாதனப் பெட்டியின் உள்ளடக்கங்கள்

  அதிகுளிர்சாதனப் பெட்டியின் யுனிட்டில் தீடீரென ஏற்படும் மின்தடை அல்லது மின்சாரம் வழங்கல் அதிகாரசபை வேண்டுமென்று மேற்கொண்ட ஒரு செயற்பாட்டினால் ஏற்பட்டிருக்கக் கூடாது எனும் நிபந்தனைக்குட்பட்டு, மின்சாரம் வழங்கல் திடீரென தடைப்படுதல் காரணமாக வெப்பநிலை கூடுதல் அல்லது குறைதல் காரணமாக அதிகுளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ள கையிருப்புப் பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

- பெயர்க்கப்படும் பொருட்கள்

  இலங்கையில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பொருட்கள் பெயர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது வான், கடல், நதி, கால்வாய் மார்க்கங்கள் தவிர, பிரேரணைப் பத்திரத்தில் விபரிக்கப்பட்டுள்ள போக்குவரத்து சாதனங்கள் தீப்பற்றுதல், வெடித்தல் அல்லது தடம்புரளுதல் காரணமாக அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு (காப்பீடு செய்யப்பட்டுள்ள உள்ளடக்கப் பொருட்கள்) ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

- மருத்துவமனைப்படுத்தல் அனுகூலம்

  மருத்துவமனைப்படுத்தலுக்காக 10 நாட்கள் வரை நாளொன்றுக்கு ரூ. 1000 வீதம் மருத்துவமனைப்படுத்தல் அனுகூலம்

*(மேலதிக காப்பீடுகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 04, 05, 06, 07 மற்றும் 08 இல் ''பிரிவு 2 – தெரிவுக்குரிய காப்பீடுகள்''ஐப் பார்க்க)*

**மேலதிக காப்பீடுகள் (எந்தவிதமான மேலதிக கட்டுப்பணத்தையும் அறவிடாமல்)**

- கட்டிடக்கலைஞர்கள், நிலஅளவையாளர்கள், ஆலோசக பொறியியலாளர்கள் கட்டணம்
- இடிபாடுகளை அகற்றுதல்
- தீயணைத்தல் செலவு
- மாற்று குடியிருப்பு மற்றும்/அல்லது வாடகை இழத்தல்
- மாற்றங்கள் செய்தல் மற்றும் திருத்த வேலைகளின் போதான காப்பீடு
- பணிப்பாளரின் ஊழியரது தனிப்பட்ட சொத்து
- தற்காலிகமாக அகற்றுதல்

*(மேலதிக அனுகூலங்கள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 03 மற்றும் 04 ஆம் பக்கங்களைப் பார்க்க)*

**<u>பிரதான இலட்சணம்(ங்கள்):</u>**

இது சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபாரங்கள் முகம் கொடுக்கின்ற பல்வேறு அபாயவாய்ப்புகளைக் காப்பீடு செய்வதற்கான ஒரு காப்பீடாகும்.

**காப்பீடு செய்யப்படாதவைகள் (விதிவிலக்குகள்):**

**பிரிவு 01**

1) எமது எழுத்து மூல இணக்கமின்றி, கட்டிடம் வெறுமையாக விடப்பட்டுள்ள தொடர்ந்து 30 நாட்களையும் தாண்டிய எந்தவொரு காலஎல்லையிலும் அதன் உள்ளடக்கப் பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்
2) காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக் கூறவேண்டியுள்ள எந்தவொரு நீராவி அழுத்த ஆலையின் வெடிப்பினால் ஏற்படும் தீயை காப்பீடு செய்கிறது
3) காடு, புதர் அல்லது காட்டுத் தீ மற்றும் தீயிட்டுக் கொளுத்தி காணிகளை சுத்தம் செய்தல் காரணமாக அல்லது அவற்றின் பின்விளைவாக ஏற்படுகின்ற இயற்கை வெப்பம் அல்லது தன்னிச்சையான தீப்பற்றல், நிலக்கீழ் நெருப்பு ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்
4) அதிகப்படியாக இயக்கம், அதிகப்படியான அளுத்தம், ஷோர்ட் சர்க்கிட், ஆர்சிங் (arcing), தானாகவே வெப்பமேறல் அல்லது மின்சார ஒழுக்கு (மின்னல் உட்பட) காரணமாக நேரடியாக எந்தவொரு மின்னுபகரணத்திற்கும் அல்லது பொருத்துகைக்கும் இழப்பு ஏற்பட்டாலும் கூட, இதன் மூலம் காப்பீடு செய்யப்பட்டுள்ள வேறொரு ஆதனத்திற்கு தீ பரவி இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால், அவ்வாறான இழப்பு அல்லது சேதம் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தால் விலக்களிக்கப்பட மாட்டாது
5) மோட்டார் வாகனத்திற்கு அல்லது அவற்றின் பாகங்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்
6) பணம், பிணைப்பத்திரங்கள், முத்திரைகள், கையெழுத்துப் பிரதிகள், வியாபார கணக்கு பதிவுப் புத்தகங்கள், கணனி முறைமை அறிக்கைகள், பதிவுகள், வடிவங்கள், அச்சுக்கள், திட்டங்கள், கலைப் படைப்புகள், வெடிப்பொருட்கள்,

விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, வெள்ளி, பழங்காலப் பொருட்கள், மொபைல் போன்கள், ரீசார்ஜ் செய்யக்கூடிய அட்டைகள்

7) தீ விபத்து ஏற்படுகின்ற சமயத்தில் அல்லது தீப்பற்றலின் போது மேற்கொள்ளப்படுகின்ற திருட்டு அல்லது திருட்டு முயற்சி
8) எந்தவொரு பொது அதிகார சபையினதும் உத்தரவின் பேரில் சொத்துக்களை அழித்தல்

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 04 ஆம் பக்கத்தில் பிரிவு 1 – ''விசேட விதிவிலக்குகள்'' ஐப் பார்க்க)*

**பிரிவு 02**

**(இ) பணம் (விதிவிலக்குகள்)**

1) உங்களின் எந்தவொரு ஊழியரினதும் மோசடி அல்லது நேர்மையீனம் காரணமாக ஏற்படும் இழப்பு
2) வன்முறையைப் பிரயோகித்து அல்லது வன்முறையில் ஈடுபடுவதாக அச்சுறுத்துவதன் மூலம் சாவிகள் மற்றும் பூட்டின் குறியீடுகள் மற்றும் கூட்டுப் பூட்டுக்களுக்கான சாவிகள் பெறப்பட்டிருந்தாலன்றி, பாதுகாப்புப் பெட்டகம், வலுவான அறை, இழுப்பறை, பணப்பதிவேடு ஆகியவற்றிலிருந்து பணம் இழக்கப்படுதல்
3) பற்றுச்சீட்டுகள், பணம் செலுத்துதல், கணக்குப் பதிவுப் பிழைகள் அல்லது விடுபடல் காரணமாக ஏற்படும் இழப்பு
4) கவனிப்பாரற்று காணப்படும் வாகனத்தில் இருந்து திருட்டுப் போதல்
5) மர்மமான முறையில் காணாமல் போதல்

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 05 ஆம் பக்கத்தில் தெரிவுக்குரிய காப்பீடுகளில் (இ) பணம் பிரிவின் கீழ் ''இந்தப் பிரிவு காப்பீடு செய்யாதவைகள்'' ஐப் பார்க்க*

**(ஈ) பொதுமக்கள் பொறுப்பு (விதிவிலக்குகள்)**

1) வேறொரு வகையில் பொறுப்பு ஏற்புடையதாகாவிட்டால், எந்தவொரு ஒப்பந்தத்தினாலும் அல்லது உடன்படிக்கையினாலும் எழுகின்ற பொறுப்பு.
2) எந்தவொரு நீராவி அழுத்த ஆலையின் வெடிப்பின் விளைவினால் எழுகின்ற பொறுப்பு
3) காப்புறுதி செய்யப்பட்டவரின் பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும் போது தவிர, காப்புறுதி செய்யப்பட்டவரால் உற்பத்தி செய்யப்பட்ட, விற்கப்பட்ட, வழங்கப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட பொருட்களால் ஏற்படுகின்ற காயம் அல்லது சேதத்தால் எழுகின்ற பொறுப்புக்கள்
4) விற்கப்பட்ட அல்லது வழங்கல் செய்யப்பட்ட பொருட்களை (கொள்கலன் உட்பட) புதுப்பித்தல் அல்லது மீளநிறுவும் பொறுப்பு

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 05 ஆம் பக்கத்தில் தெரிவுக்குரிய காப்பீடுகளில் (ஈ) பொதுமக்கள் பொறுப்பு பிரிவின் கீழ் ''விதிவிலக்குகள்'' ஐப் பார்க்க*

**(உ) பொருத்தப்பட்டுள்ள கண்ணாடி மற்றும் அறிவித்தல் பலகை/பெயர்ப் பலகை (விதிவிலக்குகள்)**

1) காப்பீடு செய்யப்பட்டுள்ள ஆதனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வேலை காரணமாக ஏற்படும் உடைதல் அல்லது சேதம்
2) சமிக்ஞை பலகைகள் தொடர்பில், துப்புரவு செய்தல் அல்லது புதுப்பித்தல் ஆகிய எந்தவொரு செயற்பாட்டினாலும் உடைந்துபோதல் அல்லது சேதமடைதல் மற்றும் இயந்திர முறிவு அல்லது மின்சக்தி பயன்பாட்டினால் ஏற்படும் இழப்பு
3) சட்டகம் அல்லது சட்டகத்தின் சிதைவினால் ஏற்படும் சேதம்
4) அதிர்வு காரணமாக ஏற்படும் சேதம்

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 06 ஆம் பக்கத்தில் தெரிவுக்குரிய காப்பீடுகளில் (உ) பொருத்தப்பட்டுள்ள கண்ணாடி மற்றும் அறிவித்தல் பலகை/பெயர்ப் பலகை பிரிவின் கீழ் ''இந்தப் பிரிவு காப்பீடு செய்யாதவைகள்'' ஐப் பார்க்க*

**(ஊ) குறிப்பிட்ட நபர்களுக்கு ஏற்படுகின்ற விபத்து (விதிவிலக்குகள்)**

1) மரணம் அல்லது இயலாமையானது,
   a. முன்பிருந்தே நிலவும் ஒரு நிலைமை அல்லது அவ்வாறான ஒரு நிலைமையுடன் தொடர்புடைய சிக்கலான தன்மையினால் அல்லது கருவுற்றதனால் ஏற்பட்டது
   b. வேண்டுமென்று தனக்குத் தானே காயம் ஏற்படுத்திக் கொள்ளல், தற்கொலை, புத்தி பேதலித்த தன்மை, மதுபானம் அல்லது போதைப் பொருளின் தாக்கம் காரணமாக ஏற்பட்டது
   c. கயிறு அல்லது வழிகாட்டி அவசியமாகின்ற மலையேறலின் போது, கொடுப்பனவு வழங்கப்படுகின்ற எந்தவொரு விளையாட்டும், நீருக்கடியில் சுவாச உபகரணங்களைப் பாவிக்கின்ற எந்தவொரு செயற்பாடும், இரு கால்களைப் பயன்படுத்தும் ஓட்டப்பந்தயம் தவிர்ந்த வேறு ஓட்டப்பந்தயங்கள், பூரண அனுமதி பெற்ற பயணிகள் போக்குவரத்து விமானத்தில் ஒரு பயணியாக அல்லாது பறத்தல் அல்லது வேறேதேனும் வான் பறப்பு நடவடிக்கைகள், வேண்டுமென்றே ஒரு விபத்தை எதிர்கொள்ளல் காரணமாக
2) ஒரே காயம் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட அனுகூலங்கள்
3) 65 வயதுக்கும் மேற்பட்ட எந்தவொரு நபருக்கும் ஏற்படுகின்ற காயம்

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 06 ஆம் பக்கத்தில் தெரிவுக்குரிய காப்பீடுகளில் (ஊ) குறிப்பிட்ட நபர்களுக்கு ஏற்படுகின்ற விபத்து பிரிவின் கீழ் ''விதிவிலக்குகள்'' ஐப் பார்க்க*

**(எ) தொழிலாளர் நட்டஈடு (விதிவிலக்கு)**

1) உங்களின் ஒப்பந்தக்காரர்களது ஊழியர்கள் தொடர்பான உங்களின் பொறுப்புக்கள்
2) ஓர் ஒப்பந்தம் காரணமாக எழுகின்ற, எனினும் அத்தகைய ஓர் ஒப்பந்தம் இல்லாத போது ஏற்பட முடியாத உங்களின் எந்தவொரு பொறுப்பும்
3) உங்களுக்கும் சம்பந்தப்பட்ட தரப்புக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் இல்லாது எந்தவொரு தரப்பிடமிருந்தும் நீங்கள் அறவிட்டுக் கொள்ள உரிமையுள்ள ஏதேனும் பணத் தொகை
4) வேண்டுமென்றே சுய காயம் ஏற்படுத்திக் கொள்ளல் அல்லது ஒரு விபத்துக் காயத்தை வேண்டுமேன்றே தீவிரமடையச் செய்தல் காரணமாக ஏற்படுகின்ற எந்தவொரு இயலாமையும் மரணமும்

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 07 ஆம் பக்கத்தில் தெரிவுக்குரிய காப்பீடுகளில் (எ) தொழிலாளர் நட்டஈடு பிரிவின் கீழ் ''இந்தப் பிரிவு காப்பீடு செய்யாதவைகள்'' ஐப் பார்க்க*

**People's Insurance PLC,** No. 07, Havelock Road, P.O. Box 215, Colombo 05.
Tel: +94 11-2126 126 | Fax: +94 11-2126 109 | E-mail: pilassist@plc.lk | www.peoplesinsurance.lk
(A Subsidiary of People's Leasing & Finance PLC and People's Bank) - Company No. PB 3754 PQ

**(ஏ) மருத்துவமனைப்படுத்தல் அனுகூலம் (விதிவிலக்கு)**

1) கருத்தரித்தல், கருக்கலைதல் அல்லது பிள்ளைப் பிரசவம்
2) மனநல அல்லது நரம்பியல் கோளாறு, மதுபானம் போதைப் பொருள் பாவனை
3) அழகுசாதன அல்லது பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை அல்லது எந்தவொரு திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சையும்
4) ஒரு விபத்தினால் அவசியமாக்கப்பட்டிருந்தாலன்றி, பல் சிகிச்சை அல்லது சத்திர சிகிச்சை
5) வழமையான பரிசோதனை, குணமடைந்து வருதல், காவல் அல்லது ஓய்வு பராமரிப்பு
6) புத்திசுவாதீனத்துடன் அல்லது புத்தி பேதலித்த நிலையில் தற்கொலைக்கு முயற்சித்தல் அல்லது சுயமாக காயம் ஏற்படுத்திக் கொள்ளல்
7) ஆயுர்வேத மருத்துவமனை அல்லது உள்நாட்டு, ஹோமியோபதி அல்லது ஊசி மருத்துவ சிகிச்சை வழங்க மாத்திரம் கொண்டு நடாத்தப்படுகின்ற எந்தவொரு நிறுவனமும்
8) பிறவி நோய்கள்
9) முன்பிருந்தே நிலவும் நோய்கள்

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 08 ஆம் பக்கத்தில் தெரிவுக்குரிய காப்பீடுகளில் (ஏ) மருத்துவமனைப்படுத்தல் பிரிவின் கீழ் ''விதிவிலக்குகள்'' ஐப் பார்க்க*

**அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது விதிவிலக்குகள்**

1& அ) யுத்தம்
ஆ) கலகம் மற்றும் பணிப்புறக்கணிப்பு
இ) சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட எந்தவொரு அதிகாரசபையினாலும் பறிமுதல் செய்யப்படல், கட்டளையிடுதல் அல்லது அரசுடைமையாக்கப்படல் காரணமாக ஏற்படுகின்ற நிரந்தர அல்லது தற்காலிக உரிமை இழப்பு
ஈ) எந்தவொரு பயங்கரவாத செயற்பாடும்

2) விமானம் அல்லது ஏனைய வான் பறப்பு சாதனங்கள் ஒலி வேகத்தில் அல்லது சுப்பர் சொனிக் வேகத்தில் பயணிப்பதால் வெளிவரும் அளுத்த அலைகளால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

3) தற்போது அல்லது வேறு எந்த வரிசையிலும் இழப்புக்கு பங்களிக்கும் வேறு எந்தக் காரணம் அல்லது நிகழ்வைப் பொருட்படுத்தாமல், பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றின் விளைவாகவோ அல்லது தொடர்புடையதாகவோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் எந்தவொரு தன்மையையும் சார்ந்த இழப்பு, சேதம், ஆகுசெலவு அல்லது செலவு:

அ. ஏதும் அணு எரிபொருளில் இருந்து அல்லது அணுப் பொருத்துகை, பிரதிச் செயற்பாடு அல்லது ஏனைய அணுச் சேர்க்கை அல்லது அணு எரிபொருள் ஆகியவற்றினால் வரும் அயனாக்கும் கதிர்வீச்சுக்கள் அல்லது ரேடியோக்கதிரியக்கங்கள்.
ஆ. ரேடியோக் கதிரியக்கம், அணுப் பொருத்துகை, பிரதிச் செயற்பாடு அல்லது ஏனைய அணுச் சேர்க்கை அல்லது அணு எரிபொருள் ஆகியவற்றின் விஷவாயு வெடித்தல் அல்லது ஏனைய அபாயகரமான அல்லது மாசடைந்த பொருட்கள்

இ. அணு அல்லது அணுப்பிளவு மற்றும் / அல்லது பிணைவு அல்லது அது போன்ற ஏனைய செயற்பாடுகள் அல்லது கதிரியக்க சக்தி அல்லது பொருள் பயன்படுத்தப்படுகின்ற ஏதும் ஓர் ஆயுதம்.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 08 ஆம் பக்கத்தில் ''அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது விதிவிலக்குகள்'' ஐப் பார்க்க*

**<u>கட்டுப்பணம் செலுத்தும் முறை:</u>**

காப்புறுதிக்கான கட்டுப்பணம் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற புதுப்பித்தலின் போது கட்டுப்பணம் (காப்புறுதி அட்டவணையில் வேறு விதமாக குறிப்பிடப்பட்டிருக்காவிட்டால்) வருடாந்தம் செலுத்தப்பட வேண்டும்.

**<u>உரிமைக்கோரல் செயன்முறை மற்றும் தேவையான ஆவணங்கள்:-</u>**

ஓர் உரிமைக்கோரலை விடுப்பதற்கு காரணமயமைகின்ற அல்லது உரிமைக்கோரலை விடுக்க முடியுமான ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் செய்ய வேண்டியது:

1) உடனடியாக எங்களுக்கு தெரிவித்துவிட்டு, கூடிய விரைவில் காயம், நோய், இழப்பு, சேதம், நட்டம், சட்டப்பொறுப்பு அல்லது ஏதேனும் செலவுகள் பற்றிய முழு விபரங்களையும் எமக்கு எழுத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் அது கலகம், பொதுமக்கள் கொந்தளிப்பு அல்லது தீங்கிழைக்கும் நபர்களால் ஏற்பட்டிருந்தால் 7 நாட்களுக்குள் மற்றும் மற்ற எல்லா நிகழ்வுகளிலும் 14 நாட்களுக்குள் விபரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2) தீங்கிழைக்கும் நபர்களால் அல்லது திருட்டினால் சேதம் ஏற்பட்டிருந்தால், உடனடியாக பொலிசில் முறைப்பாடு செய்ய வேண்டும்.
3) கோரப்பட்டுள்ள அனைத்து ஆதாரங்களையும், தகவல்களையும் மற்றும் ஒத்துழைப்பையும் உங்களது செலவில் வழங்க வேண்டும்
4) ஒவ்வொரு ரீட் கட்டளையையும் அல்லது வேறேதும் ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதும் அவற்றை எமக்கு அனுப்ப வேண்டும். எமது எழுத்துமூல அனுமதியின்றி அவற்றை ஏற்றுக் கொள்ளல் அல்லது பொறுப்பை ஏற்றல் அல்லது பிரிதொரு தரப்புக்கு ஒரு கொடுப்பனவை வழங்க வாக்குறுதி அளித்தல் ஆகியவற்றைச் செய்யக்கூடாது.
5) உங்களின் இழப்பீட்டை செலுத்த முன்னர் அல்லது செலுத்திய பின்னர் உங்களின் பெயரில் எமது செலவில் எந்தவொரு உரிமைக்கோரலையும் பாதுகாக்கவோ அல்லது தீர்த்து வைக்கவோ, பொறுப்பேற்கவோ அல்லது இயக்குவதற்கோ அல்லது வேறு எந்த நபருக்கும் எதிராக எந்தவொரு உரிமையையும் செயற்படுத்துவதற்கு எமது தற்றுணிபுக்கு இணங்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க எம்மை அனுமதிக்க வேண்டும்.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 09 ஆம் பக்கத்தில் ''அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது விதிவிலக்குகள்'' இன் கீழ் விடய இல. 05 ஐப் பார்க்க*

**<u>மோசடி:</u>**

காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது அவரின் சார்பாக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் ஓர் உரிமைக்கோரிக்கை ஏதேனும் ஒரு வகையில் ஆதாரம் அற்றதாகவோ அல்லது மோசடியானதாகவோ அல்லது வேண்டுமென்றே மிகைப்படுத்தப்பட்டதாகவோ இருந்தால், அல்லது அதற்கு ஆதரவாக பொய்யான பிரகடனம் அல்லது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், இதன் கீழ் எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 09 ஆம் பக்கத்தில் ''அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது விதிவிலக்குகள்'' இன் கீழ் விடய இல. 06 ஐப் பார்க்க*

**காப்புறுதி உரிமையாளரின் பொறுப்புக்கள்:**

**முக்கியமான விடயங்களை வெளிப்படுத்துவது பற்றி காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு**

- கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில்:- எந்தவொரு உரிமைக்கோரல் நிராகரிப்பையும் தடுத்துக் கொள்வதற்காக பிரேரணைப்பத்திரத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து முக்கியமான விடயங்களையும் உண்மையாகவும் சரியாகவும் வெளிப்படுத்தவும்.
- காப்புறுதிக் காலஎல்லையில்:- அபாயவாய்ப்பு மற்றும் தனிப்பட்ட தகவல்களில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பற்றி காப்புறுதிக் கம்பனிக்கு அறிவிக்கவும்.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 09 ஆம் பக்கத்தில் ''அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது விதிவிலக்குகள்'' இன் கீழ் விடய இல. 04 ஐப் பார்க்க*

**உரிமைக்கோரலை சமர்ப்பிக்கும் போது காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு:-**

- உரிமைக்கோரலை சமர்ப்பிக்கும் போது:- உரிமைக்கோரல் படிவத்துடன் உரிமைக்கோரல் செயன்முறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான அனைத்து ஆவணங்களையும் விபரங்களையும் வழங்கவும்.
  *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 09 ஆம் பக்கத்தில் ''அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது நிபந்தனைகள்'' இன் கீழ் விடய இல. 05 ஐப் பார்க்க*

- கட்டுப்பணம் செலுத்துதல்:- காப்புறுதிப்பத்திரத்தின் கட்டுப்பணம் செலுத்தும் செயலாணைக்கு இணங்க இருத்தல் வேண்டும்.
  *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 10 ஆம் பக்கத்தில் ''அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது நிபந்தனைகள்'' இன் கீழ் விடய இல. 13 ஐப் பார்க்க*

- காப்புறுதி செய்யப்பட்டவரால் காப்பீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்தை தடுத்துக் கொள்வதற்கு அல்லது மட்டுப்படுத்திக் கொள்வதற்கு நியாயமான அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறை:-**

உங்களுக்கு சேவை வழங்க நாம் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறோம் என்பதுடன் உங்களின் ஆலோசனைகளை/முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ள விரும்புகின்றோம். எமது சேவை தொடர்பில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், நீங்கள் பின்வரும் முறைகள் ஊடாக ஒரு முறைப்பாட்டை முன்வைக்கலாம்:

- தொலைபேசி மூலம் - வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் – 011 2126136
- மின்னஞ்சல் மூலம் - pilassist@peoplesinsurance.lk
- வட்ஸ்அப் மூலம் - 0716230048

- தொலைநகல் மூலம் - 011 2126109
- தபால் மூலம் - வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர், பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ, இல. 07, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05
- ஒன்லைன் வழியாக – முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் படிவத்தை எமது www.peoplesinsurance.lk எனும் வெப்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். தயவுசெய்து "முறைப்பாடுகள்" டெப் ஐ அழுத்தவும்.
- எமது அலுவலகத்துக்கு வருவதன் மூலம்

ஒரு முறைப்பாட்டை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பின்வரும் தகவல்களை வழங்க வேண்டும்:-

i. முறைப்பாட்டை சுருக்கமாக
ii. உங்களின் பெயர் மற்றும் உங்களைத் தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கங்கள்
iii. குறிப்புகள்: காப்புறுதிப்பத்திர இலக்கம் / வாகன இலக்கம் / உரிமைக்கோரல் இலக்கம்
iv. உறுதிப்படுத்துகின்ற எந்தவொரு ஆவணமும்

முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறையை மும் மொழிகளிலும் எமது www.peoplesinsurance.lk எனும் வெப்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். தயவுசெய்து "முறைப்பாடுகள்" டெப் ஐ அழுத்தவும்.

**<u>முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தல்:-</u>**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு முறைப்பாட்டுக்காக எம்மால் வழங்கப்பட்ட தீர்வு உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால், கீழுள்ள மாற்று முரண்பாடுகளைத் தீர்க்கும் பொறிமுறையை நீங்கள் பயன்படுத்தலாம்:

i. உங்கள் முறைப்பாடுகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:-
இலங்கை காப்புறுதி ஒம்புட்ஸ்மன்
இல. 1, பெதஸ்தா பிளேஸ், கொழும்பு 05
info@insuranceombudsman.lk
011 2505542 / 011 250 5041

ii. மத்தியஸ்தம்:- காப்புறுதிப்பத்திரத்தின் மத்தியஸ்த வாசகத்தின்படி

iii. உங்கள் முறைப்பாடுகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:-
பணிப்பாளர் – ஆய்வு
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01
011 2396184-9 / 011 2335167
investigation@ircsl.gov.lk / info@ircsl.gov.lk

**People's Insurance PLC,** No. 07, Havelock Road, P.O. Box 215, Colombo 05.
Tel: +94 11-2126 126 | Fax: +94 11-2126 109 | E-mail: pilassist@plc.lk | www.peoplesinsurance.lk
(A Subsidiary of People's Leasing & Finance PLC and People's Bank) - Company No. PB 3754 PQ

PEOPLE'S INSURANCE
EMPOWERING A RESILIENT NATION

**கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்**

**காப்புறுதியை இரத்துச் செய்தல்:**

காப்புறுதி செய்யப்பட்டவரின் வேண்டுகோலுக்கு இணங்க இந்தக் காப்புறுதியை எந்த வேளையிலும் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்பதுடன், அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், எந்தவொரு உரிமைக்கோரிக்கையையும் பெற்றுக் கொண்டிருக்கக் கூடாது எனும் நிபந்தனைக்குட்பட்டு, காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதி அமுலில் இருந்த காலஎல்லைக்கான பொதுவான குறுகிய கால விகிதாசாரமொன்று தக்க வைத்துக் கொள்ளப்படும். காப்புறுதி செய்யப்பட்டவருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு காப்புறுதிக் கம்பனியின் விருப்பத்துக்கு இணங்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காப்புறுதியை இரத்துச் செய்ய முடியும் என்பதுடன், அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யும் திகதியில் இருந்து காலாவதியாகாமல் இருக்கும் காலஎல்லைக்காக கட்டுப்பணத்தின் விகிதாசார பங்கொன்றை காப்புறுதி கம்பனி திருப்பி செலுத்த வேண்டும்.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 10 ஆம் பக்கத்தில் ''அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்புடைய பொது நிபந்தனைகள்'' இன் கீழ் விடய இல. 09 ஐப் பார்க்க*

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை முறையாகக் கடைபிடிப்பது மற்றும் பின்பற்றுவது, இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் எந்தவொரு கொடுப்பனவையும் மேற்கொள்வதற்கான ஒரு முன்-நிபந்தனையாக இருக்கும்.

**முக்கிய குறிப்புகள்:**

காப்புறுதித் திட்டங்கள் பற்றிய ஆவணத்தின் (IPID) நோக்கமாக இருப்பது, அடிப்படைக் காப்பீடு மற்றும் மேலதிக காப்பீடுகளின் (ஏற்புடையதானால்) மற்றும் காப்புறுதிப்பத்திரத்தின் முக்கியமான இலட்சணங்கள் பற்றிய சாராம்சம் ஒன்றை வழங்குவதாகும் என்பதுடன் அது உங்களின் குறிப்பிட்ட பிரத்தியேக தேவைகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ளதொன்றல்ல என்பதைக் கவனிக்கவும். இந்தக் காப்புறுதியுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்களை மேலோங்கி நிற்கும் காப்புறுதிப்பத்திரத்தின் ஆங்கிலப் பதிப்பின் விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளால் நிருவகிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**மேலதிக தகவல்களுக்காக:**

உங்களுக்கு மேலதிக தகவல்கள் அவசியமானால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்:

- தொலைபேசி - 0112126126
- மின்னஞ்சல் - pilassist@peoplesinsurance.lk
- நாடு முழுவதும் அமைந்துள்ள எமது கிளை அலுவலகமொன்றுக்கு வருவதன் மூலம்